இணைப்பு-II

(53ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

சுற்றுச்சூழல் - வனத்துறை

சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

சுற்றுச் சூழல் மாசுபடுவதனால் ஏற்படுகின்ற பாதிப்புகள் மூன்றாகும். ஒன்று மனிதச் சுகாதாரம் பதிக்கப்படுகின்றது. இரண்டாவதாக, பொருளாதார உற்பத்தி குறைகிறது, மூன்றாவதாக, ''வதிகள்'' இழப்பிற்கு காரணமாகிறது. மாசு படாத சுற்றுச் சூழலிலிருந்து, மக்கள் அடையும் பயன்களே ''வசதிகள்'' எனப்படும். 1976-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 42-வது திருத்தத்தின் மூலம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சுற்றுச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான விதித்துறைகள், 1977 ஜனவரி 3-ஆம் நாள் முதல் சேர்க்கப்பட்டன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் நான்காம் அத்தியாயத்தில் அரசுக் கொள்கைகளின் நெறிமுறைக் கோட்பாடுகளில் சுற்றுச் சூழலைப் பாதுகாத்து, மேம்படுத்தவும், இந்நாட்டின் வனங்களையும் வனவிலங்குகளையும் பாதுகாக்காவும், 48 எ பிரிவு சேர்க்கப்பட்டது. அதே திருத்தத்தின் மூலமாக, இந்திய குடிமகன் ஒவ்வொருவரின் அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாக மற்றொரு குறிப்பிடதக்க விதித்துறையும், சுற்றுச் சூழல் தொடர்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது. வனங்கள் ஏரிகள் ஆறுகள் வனவிலங்குகள் உள்பட இயற்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதும் உயிரினங்களிடம் கருணை காட்டுவதும் இந்தியக் குடிகமன் ஒவ்வொருவரின் கடமை என இது வரையறுக்கிறது. சுற்றுச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்த, பல்வேறு சட்டங்களையும், விதிகளையும் செயலாக்குவதற்காக, 1982-ல் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வகையில் எடுக்கப்பட்ட பெருமுயற்சி ஆகும்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம்

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் 1982-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. வாரியம் கீழ்க்கண்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது.

1. 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு, கட்டுப்பாடு)சட்டம் (1978, 1988-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது).

2. 1977 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு, கட்டுப்பாடு) மேல்வரிச் சட்டம் (1991-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது)

3. 1981-ஆம் ஆண்டு காற்று (மாசுத்தடுப்பு கட்டுப் பாடு) சட்டம் (1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது)

4. 1986 ஆம் ஆண்டு சுற்றுப்புறச் சூழல் (பாதுகாப்பு) சட்டம்.

நீர், காற்று மாசுக் கட்டுப்பாடு சட்டங்களின்படி, புதிதாகத் தொடங்கவிருக்கும் அனைத்து தொழிற்சாலை களும் மற்றும் ஏற்கனவே இயங்கி வரும் தொழிற்சாலை களும், அவற்றில் இருந்து வெளியேறும் கழிவு நீரை ஓடை யிலோ அல்லது கிணற்றிலோ அல்லது சாக்கடையிலோ அல்லது நிலத்திலோ செலுத்துவதற்கும், காற்று மாசுத் தடுப்பு பகுதியில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் இவ்வாரியத்தின் அனுமதி விண்ணப்பிக்க வேண்டியது அவசியமாகும். தமிழ்நாடு மாநிலம் முழுவதுமே, காற்று, மாசுக்கட்டுப்பாடு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் வழங்கும் அனுமதி ஆணையில் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர், தொழிற்சாலைகள் வெளியேற்றும் காற்று ஆகிய வற்றின் தரங்கள் இவ்வாறாகத்தான் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது. அனுமதி ஆணை ஆண்டு தோறும் மார்ச் திங்கள் வரை செல்திறனுள்ளதாக இருக்கும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடுவாரியம் இதுவரை 1974 ஆம் ஆண்டு நீர் (மாசுக் தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 10,827 தொழிற்சாலைகளுக்கும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசுத் தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 7260 தொழிற்சாலைகளுக்கும் அனுமதி ஆணைகள் அளித்துள்ளது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மாவட்ட அள வில் நல்ல நிர்வாக அமைப்புகளைக் கொண்டுள்ளதால் எந்த ஒரு புகாரையும் கிடைக்கப்பெற்ற 24 மணி நேரத்திற்குள் விசாரணை செய்யும் நிலையில் உள்ளது. இவ்வாரிய நிறுவன அமைப்பு இந்தியாவிலேயே தலை சிறந்ததாகத் திகழ்கிறது. உலக வங்கி போன்ற பல்வேறு பன்னாட்டு அமைப்புகளும், மத்திய அரசின் சுற்றுச்சூழல் இணை அமைச்சரும் இவ்வாரியத்தின் பலவகை பணிகளையும் திறம்பட செயல்படுத்தும் திறமையை பாராட்டியுள்ளனர்.

ஆயுவுக்கூடம்:

பகுப்பாய்வு அறிவியல் ஆய்வுகள் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு உதவுவதற்காக, மூன்று மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சுழல் ஆய்வுக் கூடங்கள் சென்னை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் ஒன்று வீதம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் அம்பத்தூர்,

1993 மார்ச் 22]

வேலூர், கடலூர் ஆகிய இடங்களில் மூன்று மாவட்ட சுற்றுச் சூழல் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வுக் கூடங்கள் ஆறையும் வாரியம் தொடங்கியுள்ளது. அவை தொழில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும், தொழிற்பேட்டை களின் அருகிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீர், தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகள், சூழ்ந்துள்ள காற்று, புகைபோக்கிகளில் இருந்து வெளியேற்றப்படும் புகை, தீங்கு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ஆகியவற்றை ஆய்வு செய்யப்போதுமான நவீன சாதனங் களை சென்னையில் உள்ள நவீன சுற்றுச்சூழல் ஆய்வுக் கூடம் பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் பொறியியல் துறையில் பி.எச்.டி. பட்டம் பெறுவதற்கான ஆராய்ச்சி, மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ள உதவும் மையமாக இந்த ஆய்வுக்கூடம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. நாட்டின் தலை சிறந்த சுற்றுச்சூழல் ஆய்வுக் கூடமாக இது அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

கண்காணிப்பு :

பல்வேறு நிருவாக ஏற்பாடுகளின்படி மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்களும் அவர்களின் கீழ் பணிபுரியும் தொழிற்நுட்பப் பணியாளர்களும் தங்கள் அதிகார வரம்புக்குட் பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து தொழிற்சாலைகளையும் பார்வையிட்டு கண்காணித்து வருகின்றனர். மிக அதிகமாக மாசு விளைவிக்கக் கூடியவை என்ற வகையைச் சேர்ந்த ''சிகப்பு'' பிரிவு தொழிற்சாலைகளை இணைத் தலைமை சுற்றுச்சூழ்ல் பொறியாளர்களே நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டுமென்று பணிக்கப்பட்டுள்ளனர். விதிகளை மீறியதற்காக தொழிற்சாலைகளுக்கெதிராக, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 303 வழக்குகளையும் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 122 வழக்குகளையும் இவ் வாரியம் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்ட விடா முயற்சிகள் காரணமாக பல்வேறு துறைகளில் உள்ள பல தொழிற்சாலைகள் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியை மேற் கொண்டுள்ளன.

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டம் (ஜெம்ஸ்) :

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம், உலக சுகாதார நிறு வனம், உலக வாணியியல் நிறுவனம், ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் கலாச்சார நிறுவனம், ஐக்கிய நாடுகள் கல்வித் திட்டம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உலகச் சுற்றுச்சூழல் கண்கணிப்புத் திட்டத்தில் இவ்வாரியம்

பங்கு கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்திற்காக காவிரி நதிப் பகுதி தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. காவிரி நதிப் பகுதியில் முசிறி, மேட்டூர், திருச்செங்கோடு ஆகிய மூன்று இடங்களிலிருந்து மேற் பரப்பு நீர் மாதிரிகளும் முசிறிக்கு அருகே ஓர் இடத்திலிருந்து நிலத்தடி நீர் மாதிரியும் சேரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

இந்திய தேசிய நீர்வள கண்காணிப்புத் திட்டம் (மினார்ஸ்) :

இத்திட்டத்தின் கீழ், 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல், காவிரி, தாமிரபரணி ஆறுகளின் நீர் தன்மை குறித்து, காவிரி பகுதியில் 15 இடங்களிலும், தாமிரபரணி பகுதியில் 7 இடங்களிலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேற்சொன்ன இடங்களிலும் ஒவ்வொரு மாதமும், மாதிரிகள் சேரிக்கப்பட்டு, 22 தன்மைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு கலாண்டிற்கொரு முறை புது டில்லி, மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு அறிக்கைகள் அனுப்பப்படுகின்றன.

சுற்றுப் புற காற்று தரக் கண்காணிப்பு தேசியத் திட்டம்:

இவ்வாரியம் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஒத்துழைப்புடன், காற்று தரக் கண்காணிப்புத் தேசியத் திட்டத்தில் பங்கு கொண்டு வருகிறது. சென்னை மாநகரின் சுற்றுப் புறக் காற்று மண்டலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எண்ணூர், மணலி, திருவொற்றியூர், பாரிமுனை, மயிலாப்பூர் ஆகிய இடங்களில் சுற்றுப் புறக் காற்று தரக் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு சுற்றுப் புறக் காற்றின் தரம் வாரத்திற்கு இரு முறை கண்காணிக்கப்படுகிறது சுற்றுப் புறக் காற்றுத் தரம் கண்காணிப்பு நிலையங்கள் தூத்துக்குடியிலும் கோயம்புத்தூரிலும் அமைக்கப்பட்டுள்ளன.

மணலி சுற்றுப் புற பகுதிகளின் தாங்கு திறன் குறித்த ஆய்வு :

மணலிப் பகுதி, தமிழ்நாட்டில் பெருமளவில் தொழிற்சாலைகள் அமைந்திருக்கிற பகுதியாகும். இங்கு பெரிய இரசாயன தொழிற்சாலைகள், பெட்ரோலிய இரசாயன தொழிற்சாலைகள் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை போன்றவை அமைந்திருக்கின்றன. அப்பகுதியை அதிக அளவு பயன்படுத்தி, அதனால் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலை பாதிக்காமல் இருக்கச் செய்வதற்கு, மணலிப் பகுதியில் நிலவும் சூழ்நிலைகள் குறித்து தீர்மானிக்கும் நோக்குடன், ரூ. 30 இலட்சம் செலவில், சுற்றுப்புற ஆதாரங்களின் தாங்கு திறன்

குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்த ஆய்வுப்பணி பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தொடக்கத் தகவல் சேகரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுப் பணி 1994ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏரிகளைக் கண்காணித்தல் :

தமிழ்நாட்டிலுள்ள ஏரிகளின் நீரின் தரத்தைப் பாதுகாக்க, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வசாியம் நடவடிக்கை எடுத்துள்ளது. முதற்கட்டமாக, கொடைக்கானலில், உணவகங்கள் தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள், அவர்கள் நடத்தும் உணவகங்கள், விடுதிகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரை நிலத்தில் அல்லது நீர் நிலையில் விடுவதற்கு முன், அக்கழிவு நீரைச் சுத்திகரிக்க, கொடைக்கானலில் பொதுவான ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்த இவ்வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. கொடைக்கானல் கழிவு நீர் சுத்திகரிப்பு (தனியார்) நிறுவனம் என்ற பெயரில் நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும், தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனமும், திட்ட செயற் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளன. இந்நிறுவனம் அமர்த்திய ஆலோசகர் அனுப்பிய ஒப்பந்தபுள்ளி ஆவணங்களை வாரியம் சரிபார்த்துக் கொண்டிருக்கிறது. மேற் சொன்னவற்றுடன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் உதகமண்டலம் ஏரியையும் ஏற்காடு ஏரியையும் கண்காணித்து வருகிறது.

காவிரி ஆற்றை தூய்மைக் கேட்டினின்று காத்தல் :

கங்கை ஆறு செயல் திட்டத்தின் அடிப்படையில், காவிரி ஆற்றின் தூய்மைக் கேட்டினைத் தடுப்பதற்காக ஒரு செயல் திட்டம் ஒன்றை வகுத்து, மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், காவிரி பாசனப் பகுதியின் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கான திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவு சுமார் ரூபாய் 332 கோடியாகும். ஆற்றங்கரையில் கழிவு நீரை சரியான முறையில் உள்ளாட்சி மன்றங்கள் சுத்திகரித்து வெளியேற்றுவதே இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும், இத்திட்டத்தின் செயற்குறிப்பு நிதியுதவிக்காக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடற்கரையோர நீரின் தரத்தைக் கண்காணித்தல் :

மத்திய அரசின், கடல் வளத்துறை, தமிழ்நாடு கடற்கரையோர நீரின் தரத்தைக் கண்காணிக்கும் ஒரு முகவரமைப்பாக, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தை அங்கீகரித்துள்ளது.

[1993 மார்ச் 22

இத்திட்டம், 1987–88-ல் மேற்கொள்ளப்பட்டது. இது நடந்தேறிவரும் திட்டமாகும். 1992–93ல் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு ரூ.1.17இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. கடற்கரையோர நீரின் தரத்தைக் கண்காணிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையைக் கண்காணித்தல் :

தமிழ்நாட்டில், எல்லா பெரிய நகரங்களிலும் நகர்ப்புற வளர்ச்சியும் தொழில் வளர்ச்சியும், வாகனங்களின் போக்குவரத்தை அதிகரித்துள்ளது. சென்னை மாநகரில் உள்ள 6 இலட்சம் வாகனங்களில், மோட்டார் கார்கள் மட்டும் 4 இலட்சமாகும். வாகனங்களிலிருந்து வெளியேறும் கழிவுகளினால் சுற்றுப்புறக் காற்றின் தன்மை அதிக அளவு பாதிக்கப்படுகிறது. மாநகரின் சுற்றுச்சூழலைத் திறம்பட நிருவகிக்க, வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினால் காற்று மாசுபடும் அளவைக் குறைக்க, அனைத்து வாகனங்களையும் மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் கீழ்க் கொண்டு வரவேண்டியது அவசியமாகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், முதலில், சரக்குப் போக்குவரத்து வாகனங்களின் வாகனப் புகை கண்காணிப்புப் பணியை 1–5–1992 ஆம் நாளிலிருந்து மேற்கொண்டு செயல்படத் தொடங்கியது. வாகனப் புகை கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும் 'கண் காணிப்பு நிலையங்கள்', சேத்துப்பட்டு, தி.நகர், இராயபுரம், கிண்டி மற்றும் வளசரவாக்கம் ஆகிய ஐந்து இடங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், சென்னை மாநகரிலுள்ள மொத்த வாகனங்களை கண்காணிக்க, கன்னி முறையிலான தகவல் சேகரிப்பு அமைப்புடன், அதிக எண்ணிக்கையில் கண்காப்பு நிலையங்களை அமைக்கக் கருதியுள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு பொது நிலையம் அமைப்பது குறித்த திட்டம் :

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், கழிவு நீர் சுத்திகரிப்பு பொது நிலையங்கள் அமைப்பதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. மாசுபடுத்துபவர்கள் அவர்களே சங்கங்கள்/ நிறுவனகங்களை ஏற்படுத்தி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை செயற்படுத்துவதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்கும் வகையில் ஊக்குவிக்கப்படுகின்றனர். முதலில் தோல் பதனிடுதல் மற்றும் துணி நூல் சாயம் போடுதல் ஆகிய தொழிற் பிரிவுகளில் இச் சுத்திரிகரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. கழிவு நீர் சுத்தகரிப்பு பொது நிலையங்களை அமைத்து, செயற்படுத்தி, பராமரிக்கும் பணிப் பொறுப்பினை கவனிப்பதற்கு முழுத் தகுதியினைப் பெற்ற மேலாண்மையுடன் கூடிய நிறுவனங்களை ஏற்படுத்துமாறு இந்தத் தொழிற்பிரிவுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். வாரியத்தால் அமைக்கப்பட்ட பணிக்குழு அளிக்கும்

அறிக்கையின் அடிப்படையில், தொழில் ரீதியிலான கழிவு நீரைச் சேகரித்து, சுத்திகரித்து அனுப்புவதற்கான திட்டச் செயற் குறிப்பை உருவாக்கும் பணிப்பொறுப்பை வாரியப் பதிவு பெற்ற ஆலோசகரிடம் இந்நிறுவனம் ஒப்படைக்கும். மத்திய அரசின் சுற்றுச் சூழல் வன அமைச்சகத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளி முகவரமைப்புகளின் மூலமாக தெரிந்தெடுக்கப்பட்ட ஆலோசகர் களால் உருவாக்கப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு பொது நிலையம் தொடர்பான செயற்குறிப்புகளைத் தொழில் நுட்ப வகையில் மதிப்பிடவும், மத்திய அரசு, தமிழ்நாடு அரசு நிதி நிறுவனங் களோடு தொடர்பு வகையில் இவ்வாரியம், நிறுவனங்களுக்கு தொண்டு நிதி உதவி பெற உதவுகிறது.

கழிவு நீர் சுத்திகரிப்பு பொது நிலையங்களை கீழ்க்கண்ட மையங்களில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

		எண்ணிக்கை.
1.	தோல் பதனிடும் தொழில் ..	12
2.	சாயம்தோய்க்கும் தொழில் ..	8
3.	உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் ..	1

பம்மல்-பல்லாவரம், திருப்பூர், அய்யம்பேட்டை-முத்தியால் பேட்டை, ஈரோடு ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ள கழிவு நீர் சுத்தகரிப்பு பொது நிலையங்களுக்கு 160 இலட்சம் ரூபாய் இந்திய அரசு வழங்கியுள்ளது; அதற்கு இணையான தொகையை தமிழ்நாடு அரசும் வழங்கியுள்ளது. பவானி, பி. பி. அக்ரஹாரம், ஈரோடு, சூரம்பட்டி மற்றும் கரூர் ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள துணி நூல் சாயம் தோய்க்கும் தொழிற் சாலைகளின் கழிவுநீர் சுத்தகரிப்பு பொது நிலையங்களுக்கு 61.14 இலட்சம் ரூபாயை மத்திய அரசும் அதற்கிணையான தொகையை தமிழ்நாடு அரசும் வழங்கியுள்ளது. இவ்வாரியம் மேற்கூறிய அனைத்துத் திட்டங்களையும் மிக உன்னிப்பாகக் கண்காணித்து எல்லா திட்டங்களையும் விரைவாகவும் பயனுள்ள வகையிலும் செயல்படத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் அவசர நிலை உடனடி செயல் மையங்கள் அமைத்தல் :

தொழில்கள் அதிகரித்து வருவதாலும், புதிய தொழில்நுட்ப முறை கள் புகுத்தப்படுவதாலும் இரசாயனத் தொழிற்பிரிவுகளின் எண்ணிக்கையையும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பொருட் களின் பயன்பாடும் அதிகரித்துள்ளன. அபாயகரமான மூலப் பொருட்களை பயன்படுத்தும்போதும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்லும்போதும், கையாளும்போதும் உயிருக்கும் உடமைக்கும் சேதம் விளைவிக்கக் கூடிய வகையில் விபத்து நடப்பதற்கான வாய்ப்புகள் பெருமளவில் உள்ளன. தமிழ்

நாட்டில் உள்ள பெரிய இரசாயனத் தொழில் தொகுதிகளில் அதாவது, மணலி, மேட்டூர், கடலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் அவசர சிகிச்சை அளித்து அபாயகரமான இரசாயனங்களின் விளைவுகளை மட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்க உடனடிச் செயல் மையங்களைப் படிப்படியாக அமைக்கக் கருதப்பட்டுள்ளது. அவை உயிருக்கும் உடமைக்கும் சேதம் விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருள்களினால் ஏற்படக் கூடிய விபரீத சம்பவங்களின்போது உரியவாறு நிவாரணம் அளிக்கவும் அப்பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுவதற்கேற்ப நடவடிக்கைகளை, மேற்கொள்ளவும் வகை செய்யும். முதல் கட்டமாக, 1992–93 ஆம் ஆண்டில், மணலிப் பகுதியில் இந்த வசதி அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மொத்த செலவு மதிப்பு ஏறக்குறைய ரூ. 53 இலட்சம் ஆகும். அதில், 1992–93 ஆம் ஆண்டிற்கான ரூ. 10.32 இலட்சம் அரசு மானியமாக அளித்துள்ளது. மீதித்தொகையை வாரியம் வழங்கும். இந்த மையம், எத்தகைய அவசர நிலையையும் சமாளிக்கக் கூடியதாகவும், 24 மணி நேரமும் செயல்படக் கூடியதாகவும் இருக்கும். இத்திட்டம், அபாயகரமான இரசாயனப் பொருள்களின் விவரங்கள், விபத்திற்குப்பின் தீர்வு காண வேண்டிய தொழிற்நுட்பங்கள், கணிப்பொறி, அறிவிப்பு நிலையம், பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்களடங்கிய அவசர ஊர்தி மற்றும் குறைந்தபட்ச பாதுகாப்பு கருவிகள் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். இம்மையத்தின் மூலம் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள மணலி–எண்ணூர் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் சென்னை மாவட்டத்திலுள்ள தொழிற்சாலைகள் பயன்பெறும்.

பொது அபாயகரமான கழிவுகள், சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பு

அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் இரசாயன தொழிற்சாலை செங்கை–எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் மணலி–எண்ணூர் பகுதிகளில் அமைந்துள்ளன. சுற்றுப்புறச் சூழலின் தூய தன்மையைப் பாதிக்காவண்ணம், இந்தக் கழிவுப் பொருட்கள் சுத்தம் செய்யப்பட்டு வெளியேற்றப்பட வேண்டும். சுத்திகரிப்பு மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகளைத் தனித்தனியாக ஏற்படுத்துவதென்றால் மிகவும் செலவாகும். மேலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளை வெளியேற்ற போதிய இடம் இராது. எனவே தகுந்த இடத்தில் பொது கழிவு சுத்திரிகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செங்கை–எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அபாயகரமான கழிவுகள் வெளியேற்றும் தொழிற்சாலைகள் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவை, குரோமியம் சயனைடு, பாதரசம், அமிலம்

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

1993 மார்ச் 22]

மற்றும் காரத்தன்மை உடைய சேறு சுண்ணாம்பு, கழிவு எண்ணெய் பிசின்துகள்கள், கரையும் இரசாயனப்பொருள்கள் முதலியவை கலந்த கழிவுப்பொருள்களை உண்டாக்குகின்றன. இக்கழிவுப் பொருள்களின் மொத்த அளவு ஆண்டுக்கு 40,000 டன்களாகும்.

செங்கை—எம்.ஜி.ஆர். மாவட்டம் கும்முடிப்பூண்டி வட்டம், கும்முடிப்பூண்டியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள மேனலூர் என்ற கிராமத்தில் சுமார் 50 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஏற்புடைமையைக் கண்டறிவதற்காக, சுற்றுச் சூழல் பாதிப்பு மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 65 இலட்சம் ஆகும்.

சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்ச்சி செயல் திட்டம் :

மாசுக் கட்டுப்பாட்டினை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது. மக்களை அணுகி மாசு பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் அவர்களுக்கு உணர்த்துவது வாரியத்தின் குறிக்கோளாகும். மாசுக்கட்டுப்பாட்டினை வலியுறுத்த கட்டுரைப் போட்டிகள் கருத்தரங்குகள், கூட்டங்கள், ஆகியவற்றை நடத்தியும், சுற்றுலாப் பொருள்காட்சியில் பங்கேற்றும், குடியரசு தினவிழாவில் பங்கேற்க ஓர் அலங்கார ஊர்தியை அனுப்பியும், வாரியம் அரிய பணியை ஆற்றி வருகிறது. சுற்றுச் சூழல் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வாரியம் திட்டமிட்டு வருகிறது. ஒலி, ஒளி சாதனங்களின் வாயிலாக மட்டுமின்றி, தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் பயன் பெறும் வகையில், "தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியமும் நீங்களும்" என்ற வெளியீட்டை கொணர்ந்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளை விளக்கும் வகையில் தொழிற்சாலைகள், பொதுமக்கள் ஆகியோரின் நன்மைக்காக ஒரு செய்தி மடல் வெளியிடப்படுகிறது. மாசுக்காட்டுப்பாடு பற்றி இந்நாள் வரையிலான செய்திகள், இச்செய்தி மடலில் இடம் பெறுகிறது.

சென்னை பெருநகரில் உள்ள நீர்வழிகளின் சுற்றுச் சூழலை மேம்படுத்துதல்.

சென்னை நகரில் அதாவது அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நுல்லா ஆகிய பகுதிகளில் நீர்வழிகளில் ஏற்படுகிற தடைகாரணமாக தொடர்ந்து நிகழும் மாசுக்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓவர்சீஸ் மேம்பாட்டு நிருவாகம் என்ற

அமைப்பின் உதவியால் தொடக்க நிதியுதவி ரூ. 5,50,000 பவுண்டு தொகையைக் கொண்டு இம்மாநகரில் நீர்வழிகள் செல்லும் நகர்ப்பகுதிகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்காக செவர்ன் டிரெண்ட் இன்டர்நேஷனல் ஆலோசகர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த ஆலோசகர்கள், தங்களது இடைக்கால அறிக்கையை அளித்துள்ளனர். அவர்களின் பரிந்துரைகளின்பேரில் முழுமையாக சுத்திகரிப்பு செய்யப்படாத கழிவுநீர் நீர்வழிகளில் கலக்கப்படுவதை தவிர்ப்பதற்காக கழிவு நீர் அமைப்பையும், சுத்திகரிப்பு நிலையத்தையும் நிலை உயர்த்துவதற்காக சென்னை-பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்றும் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஓவர்சீஸ் மேம்பாட்டு நிருவாக நிறுவனத்தினரின் ஆலோசனைகளுக்கிணங்க, நீர்வழிகளின் நிலையை மேம்படுத்துவதற்கு நீண்ட கால நடவடிக்கையாக நீர்வழிகளின் அடிப்பரப்பில் பல்லாண்டுகளாகத் தேங்கியிருக்கும் சகதி மற்றும் சேறு ஆகியவற்றை அகற்றி, பாதுகாப்பான இடத்தில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பூண்டி, நீரியல் ஆய்வு நீரியல் நிறுவனம், தூர்வாரும் முன் ஆய்வு ஒன்றை மேற்கொண்டு, இந்த மூன்று நீர்வழிகளிலிருந்து சுமார் 16.35 இலட்சம் கன மீட்டர் அளவுக்கு சேறு அகற்றப்படவேண்டும் என்று மதிப்பிட்டுள்ளது. கூவத்தில் மட்டும் 7.50 இலட்சம் கன மீட்டர் சேறு அகற்றப்படவேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குரோமேட், புளோரைடு, மங்கனீஸ், கந்தம், ஆகியவை போன்ற நச்சுக் கனிமங்கள் கலந்த சகதி அளவுக்கு அதிகமாக இருப்பதாக ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே, கூவத்தில் தூர் எடுக்க ஒதுக்கப்படுவதற்கு முன்னர், சாத்தியக்கூறு பற்றிய முன்ஆய்வு ஒன்றை நடத்துவது என்று ஆலோசகர்கள் முடிவு செய்துள்ளனர். கூவத்தில் சேர்ந்துள்ள சகதிகளை அகற்றி, வேறு இடத்திற்கு எடுத்து செல்வதற்காக சாத்தியக் கூறு ஆய்வு நடத்துவது தொடர்பாக, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓவர்சீஸ் மேம்பாட்டு நிருவாக நிறுவனம் தற்போது நிதியுதவி அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. ஓவர்சீஸ் மேம்பாட்டு நிருவாக நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி கேட்டுள்ளது. இவை மதிப்பிடப்பட்டு வருகின்றன.